கட்டாயக் கல்வித் திட்டத்தைக் கடைப்பிடிக்க

வழியில்லை

பெரும்பாலோருக்குக் கல்வி அளிக்கும் வசதி கிட்டவில்லை

……………(:—:)……………

பயிற்சி பெற்ற ஆசிரியர்கள் - - பல்லாயிரக்கணக்கில் தேவை

…………(—)…………

நாட்டு நலம் நாடி உழைக்க வேண்டுவது ஆசிரியர்கள் கடன்

Phone No 4502

Regd. No. M. 5458

விலை அரை அணா

இலங்கை 5 சதம்

மாலை மணி

ஆசிரியர்: C. N. அண்ணாதுரை M.A. MALAI MANI

(திராவிடர் தமிழ்த் தினசரி - கருத்திதழ்)

மலர் 1] சென்னை (22—6—50) வெளியூர் (23—6—50) [இதழ் 285

பள்ளி ஆசிரியர்களிடையே கல்வி அமைச்சர் ஓலம்!

"பள்ளி செல்லும் வயதுடைய சிறுவர்களில், 100-க்கு 36 பேர்களே கல்வி பயிலுகிறார்கள். எஞ்சியுள்ள 64 பேர் கல்வி கற்க முடியாத நிலைமையில் இருக்கிறார்கள்.

தற்போதைய நிலைமையில் 25,000 பயிற்சி பெற்ற ஆரம்பக் கல்வி ஆசிரியர்கள் இருந்தால்தான் நாட்டில் கட்டாயக் கல்வித் திட்டத்தை மேற்கொள்ள முடியும். ஆனால் அப்படிப்பட்ட நிலைமையை எதிர்பார்ப்பது இயலாத காரியம்."

இவை, அண்மையில் திருச்செங்கோடு மாவட்ட முதியோர் கல்விக் கழகத்தின் ஆதரவில் நடைபெற்ற முதியோர் கல்வி ஆசிரியர் பயிற்சி முகாம் முடிவடைந்த நாள் கொண்டாட்டத்தின்போது நடைபெற்ற பாராட்டுக் கூட்டமொன்றில் கலந்துகொண்டபோது, கல்வி அமைச்சர் மாதவமேனன் பேசியிருக்கும் பேச்சுகள், அல்ல வெளியிட்டிருக்கும் உண்மைகள்.

பயிற்சிபெற்ற ஆசிரியர்களின் கடமை யாவை என்பதை விளக்கும் முகத்தான தோழர் மாதவனார் பேசிய பேச்சுகளே இவை.

"நாட்டு நலனையே குறிக்கோளாகக் கொண்டு ஆசிரியர்கள் பணியாற்ற வேண்டும்" என்ற அறிவுரையை ஆசிரியர்களுக்குத் தந்துவிட்டு, அதனை தொடர்ந்து பேசுகையில் தான் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

ஆசிரியர்களுக்குக் கடமையின் அவசியத்தை உபதேசம் செய்கிறார் அமைச்சர். ஆனால் ஆசிரியர்களுக்கு அரசியலார் ஆற்றவேண்டிய கடமையை மட்டும் மறந்து விட்டார். நெடுநாட்களாக ஆசிரியர்களின் வாழ்வு அவல வாழ்வாக இருந்து வருவது நாடறிந்த உண்மை. பள்ளி ஆசிரியர் என்றால் பரிதாபத்துக்குரிய பிறவி, — வறுமையின் சின்னம் என்ற நிலை இன்னமும் நீடித்து வருகிறது. இந்நிலை விரைவிலே மாறும் என்றும் எதிர்பார்ப்பதற்கில்லை. ஆட்சியாளரிடம் ஆசிரியர்கள் தமது குறைகளை எடுத்து எடுத்துக்கூறி அலுத்துப்போய்விட்டனர். இப்படிப்பட்ட நிலைமையிலேதான் 'நாட்டு நலனை குறிக்கோளாகக் கொண்டு பணியாற்றுங்கள்' என்கிறார் கல்வி அமைச்சர். ஆசிரியர்களின் வீட்டு நலன் சரிந்துகொண்டே போவது, ஆட்சியாளரின் கண்களுக்குத் தெரியவில்லை!

இங்ஙனம், ஆசிரியர்களை அவல வாழ்விலே உழலவிடும் அளவுக்கு கல்வி நிலையங்களுக்காக ஆட்சியாளர் அதிக செலவிடுகின்றனரா என்றால், அதுவும் இல்லை. இதனை அமைச்சரே ஒப்புக் கொள்ளுகிறார். அதாவது, பள்ளிச் செல்லும் சிறுவர்களில் 100-க்கு 36 பேருக்கேகட்டாய கல்வி அளிக்கமுடிகிறது என்கிறார், அவர் மேலும் சொல்லுகிறார் கல்வியை வளர்க்க

(4-ம் பக்கம் பார்க்க)

ஹிட்லரால் வெளியேற்றப்பட்ட ஜெர்மன் தலைவர்

ஜெர்மனி பொதுத் தேர்தலில் போட்டியிட வேண்டும் என்கிறார்

ஆட்டவா, ஜூன் 21—

1933-ம் ஆண்டில ஹிட்லரால் வெளியேற்றப்பட்டு இப்பொழுது கனடாவில் இருந்து வரும் டாக்டர் ஆட்டோ ஸ்டேஸர் ஜெர்மனிப் பொதுத் தேர்தலில் அபேட்சகராக நிற்க வேண்டும் என்று ஜெர்மனியிலிருந்து கோரிக்கைகள் வந்தவண்ணமிருக்கின்றன.

புனர் ஜெர்மனி பெடரேஷன் என்ற ஸ்தாபனம் டாக்டர் ஸ்டேஸர் திரும்ப அனுமதியளிக்க வேண்டும் என்று கோரியிருக்கிறது. டாக்டர் ஸ்டேஸரே பன்முறை வெளியேற கனடா சர்க்காரை அனுமதி கோரினார். ஆனால், இது வரை அவர் கோரிக்கை மறுக்கப்பட்டுவிட்டது.

ஆனால் இப்போது அனுமதி அளிக்கப்படலாம் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

விசாரணை செய்யாமல் வழக்கைத் தள்ளிவிடுவது அநீதி

……(:)……

முறையீட்டை மீண்டும் விசாரிக்கவும்

………(—)………

தோழர் அனந்தநம்பியார் மனுவும் நீதிபதியின் தீர்ப்பும்

சென்னை, ஜூன் 20—

வேலூர் சிறையில் பாதுகாப்புக் கைதியாக இருக்கும் சென்னை சட்டசபை உறுப்பினர் தோழர் கே. அனந்த நம்பியாரின் மனு ஒன்று, உயர்நீதிமன்ற நீதிபதி தோழர் ஏ. எஸ். பி அய்யர் முன்பு விசாரணைக்கு வந்தது.

6-2-50-ல் வேலூர் சிறை அதிகாரி தம்மை அடித்து விட்டதாக, தோழர் நம்பியார் ஜில்லா மாஜிஸ்டிரேட்டிடம் முறையிட்டதாகவும், அந்த முறையீடு சரியானபடி தாக்கல் செய்யப்படவில்லை என்று, அதைத் திருப்பி அனுப்பிவிட்டதாகவும், ஜில்லா மாஜிஸ்டிரேட்டின் அந்த உத்தரவை ரத்து செய்து, தமக்கு நீதி வழங்கவேண்டுமென்றும், தோழர் நம்பியார் உயர்நீதிமன்றத்துக்கு மனுச் செய்திருந்தார்.

ஜில்லா மாஜிஸ்டிரேட், முறையீட்டை நிராகரிக்காமல் மனுதாரின் பிரமாண வாக்குமூலத்தைப் பதிவு செய்து கொண்டு, மேற்கொண்டு வழக்கை விசாரித்திருக்க வேண்டுமென்றும், பப்ளிக் பிராசிகியூட்டரும் இதையே ஒப்புக்கொள்ளுகிறாரென்றும் நீதிபதி தெரிவித்து, மனுதார் மீண்டும் தமது முறையீட்டை ஜில்லா மாஜிஸ்டிரேட்டிடம் தாக்கல் செய்ய அனுமதித்தார் அத்துடன் அந்த முறையீட்டை ஏற்றுக்கொண்டு மனுதாரின் வாக்குமூலத்தைப் பதிவு செய்து, சட்டப்படி மேற்கொண்டு வழக்கை விசாரிக்க வேண்டுமென்று ஜில்லா மாஜிஸ்டிரேட்டுக்கு நீதிபதி உத்தரவிட்டிருக்கிறார்.

லண்டன், ஜூன் 21—

இந்தியாவுக்கு உணவு தானியம் அனுப்ப கப்பல்கள் அமர்த்துவதும் ஏக சொந்த பொறுப்பு சாணப்படுகிறது. முன்புள்ள அதே கட்டணங்களுக்குக் கப்பல்கள் அமர்த்தப்பட்டிருக்கின்றன.

இந்தித் திணிப்பு!



இந்தி மொழி அறியா மக்கள், இந்தி கற்பதை ஒரு சுமையெனக் கருதா வகையில் இந்தியை வளர்க்கவேண்டும் என்கிறார் தோழர் பிரகாசா.

இந்தி சுமத்தப்படவில்லை; கட்டாயமாகத் திணிக்கப்படுகிறது!

—By the Courtesy of Shankar's weekly

மாலை மணி

சென்னை 22—6—50 வியாழக்கிழமை

வெந்த புண்ணிலே வேல்!

வலையிலே வீழ்ந்த மான்—தூண்டிலிலே சிக்கிய மீன்—கூண்டிலே அகப்பட்ட புலி—வர்ணாச்சிரமத்திலே வீழ்ந்த வீரன்—ஆரியத்திற்கு அடிமைப்பட்ட திராவிடன்! ஆகியவை வேதனைகரமான பரிதாபத்திற்குரிய காட்சிகள்!

ஆதிக்க வகுப்பினர்க்குத், திராவிடர்கள் அறியாமையின் காரணமாக அடிமைபோனால், அந்தக் காட்சி பிறர்க்குப் பரிதாபத்தைத்தான் தரும் ஆனால் திராவிடர்கள் அறிந்தே அடிமை—போனால், அந்தக் காட்சி பரிதாபத்தை மட்டுமல்ல, வேதனையையும், வெட்கத்தையும் சேர்த்துத்தரும்!

திராவிட இனத்தைச் சேர்ந்தோரில் பலரும் அறிந்தோ அறியாமலோ, நூற்றுக்கணக்கான ஆண்டுகளாக ஆதிக்கவகுப்பினர்க்கு அடிமைப்பட்டுப்போன காரணத்தால்தான், ஆதிக்க வகுப்பினர், எல்லாவித வசதிகளையும் பெற்று, எல்லாவிதத் துறைகளிலும் உயர்ச்சியுற்று விளங்கவும், திராவிடர்கள் கீழ்நிலையில் தள்ளப்பட்டு, எல்லாத் துறைகளிலும் வீழ்ச்சியுற்றுக் கிடக்கவும் ஆன நிலைமை, இந்நாட்டில் ஏற்பட்டது என்பதை, வரலாறு நன்கு எடுத்துக்காட்டியுள்ளது. அப்படி வீழ்ச்சியுற்ற இனம், தான் வீழ்ச்சியுற்றதற்குரிய காரணங்களைக் கண்டறிந்து, விழிப்புணர்ச்சி கொண்டு, இப்பொழுதுதான் எழுச்சியுற்று விளங்கத் தொடங்கியிருக்கிறது.

திராவிட இனம், தன்னிலை உணர்ந்து, நூற்றுக்கணக்கான ஆண்டுகளாகத் தனக்கு இழைக்கப்பட்டுள்ள கொடுமையைக் களைந்து, தன்னினத்தில் தாழ்ந்து கிடப்போரை உயர்த்தவும், தள்ளப்பட்டோரைத் தாங்கவும், தீண்டப்படாதாரைச் சமத்துவ வாழ்வில் வைக்கவும், படியாத பரம்பரையைப் படிப்புள்ளதாக ஆக்கவும், வறியாரை வளமுள்ளவர்களாகச் செய்யவும், வாய்ப்புகளற்றுக் கிடந்தவரை வாய்ப்புடையவர்களாக நிலைநிறுத்தவும், இப்பொழுது—தான் நீதியின் பேரால் முனைந்துள்ளது. இப்படிப்பட்ட அரிய உணர்ச்சி அரும்பி வரும் நேரத்தில், ஆதிக்க வகுப்பினர்க்குத், திராவிடர்களிலே சிலர், அடிமை போகிறார்கள்—அஞ்சி அடிமை போகிறார்கள்—தங்களைத்தாங்களே வஞ்சித்துக்கொண்டு வலிய அடிமை போகிறார்கள்—ஆரியத்தின் காலிலே ஆனந்தம் இருக்கிறது என்று கருதி அடிமை போகிறார்கள்—ஆரியத்திற்கு புகழ்ச்சி என்னசெய்[illegible] என்று ஏங்கி அடிமை போகிறார்கள் என்றால் அது வேதனை தரக்கூடியது—வெட்கப்படக்கூடியது!

[illegible]யார் அக்கதையை வேதனையையும், வெட்கத்தையும் [illegible]

[illegible]கிறார்கள் என்று கேட்கவல்லவா தோன்றுகிறது. உங்களுக்கு? ஆம்! மனங்கூசி மொழிகூசி, மெய்கூசித்தான் [illegible] குறிப்பிட வேண்டியிருக்கிறது! நாகூட நடுங்குகிறது, வேதனையின் விளைவால், வெட்கத்தின் கொடுமையால்!

சென்னை சர். தியாகராயா கல்லூரியின் நிர்வாகிகள்தாம் அவர்கள்!

எந்த ஒரு கொள்கையை உயிர் நாடிக் கொள்கையாகச் சர் பிட்டி. தியாகராயர் கொண்டிருந்தாரோ, அந்த ஒரு பெருங் கொள்கை, அந்த அறிஞரின் பெயராலே நிறுவப்பட்டிருக்கும் கல்லூரியின் நிர்வாகிகளால் புறக்கணிக்கப்பட்டுள்ளது—அலட்சியப் படுத்தப்பட்டுள்ளது—பழிக்கப்பட்டுள்ளது! படியாத பரம்பரையாக ஆக்கப்பட்டுவந்த திராவிட சமுதாயத்தைப் படிப்புள்ள சமுதாயமாக ஆக்கவும், வாழ்க்கைத் துறைகளிலெல்லாம் வாய்ப்புகள் அளிக்கப்படாமல் தாழ்த்திவைக்கப்பட்ட சமுதாயம் அந்த வாய்ப்புகளையெல்லாம் பெறவேண்டியும், **வகுப்புவாரி பிரதிநிதித்வ கொள்கையை உயிர்நாடிக் கொள்கையாகக் கொண்டிருந்தார்** சர். தியாகராயர். அந்தக் கொள்கைக்காகவே அல்லும் பகலும் பாடுபட்டார்; தம் பொருளையெல்லாம் வாரிக்கொடுத்தார்; கஷ்ட நஷ்டம் ஏற்றார்; நீதிக் கட்சி கண்டார்; [illegible]மக்களுக்காகப் போராடினார்; தள்ளப்பட்ட வகுப்பு மக்களுக்குத் தனிச் சலுகைகள் காட்டப்பட்டால்தான் சமத்துவமும், நீதியும் நிலைக்க முடியும் என்று உறுதிப்படுத்தி வந்தார்; பார்ப்பனரல்லாத சமுதாயமாகிய திராவிட சமுதாயம் உய்ய வேண்டுமானால், வகுப்புவாரிப் பிரதிநிதித்துவக் கொள்கை, கல்வித் துறையிலும், தேர்தல் முறையிலும், அரசாங்க அலுவல்களிலும் கடைப்பிடிக்கப்படவேண்டும் என்று வாதிட்டுவந்தார். அந்த வெள்ளுடை வேந்தன்—பார்ப்பனரல்லாதாரைப் பாதுகாக்க வந்த காவலன்—வீழ்ச்சியுற்ற சமுதாயத்திற்கு எழுச்சியூட்ட வந்த வீரன்—புதிய வழி திறந்த வழிகாட்டி—இருண்ட திராவிடத்தில் புதுப்பொலிவு பாய்ச்சிய நீதியின் தீரன் பரப்பிய கொள்கை, படுகுழியிலே தள்ளப்பட்டுப் புதைக்கப்படுகிறது—அந்த நல்லறிஞரின் பெயராலே அமைந்த கல்லூரியின் நிர்வாகிகளால்! எவ்வளவு வேதனை நிறைந்த செய்தி! அவமானம் உள்ளத்தை அரித்துத் தின்னுகிறது!

சர். பிட்டி. தியாகராயரின் வழி வந்தவரும், கல்லூரியின் நிர்வாகத்திலே தொடர்புடையவரும், சென்னை [illegible] [illegible] ஒல் ஓர் [illegible] மாஜி மேயருமான [illegible]

ராமசாமி செட்டி என்பவர் சர் தியாகராயர் கல்லூரி நிர்வாகிகள் சார்பாக 20—6—50 "இந்து" (சென்னைவெளியீடு) இதழில் அறிக்கையொன்று வெளியிட்டுள்ளார். அந்த அறிக்கையே நமக்கு வேதனையையும், வெட்கத்தையும், துக்கத்தையும் தருவதாக அமைந்துள்ளது. கல்லூரியில் மாணவர்களைச் சேர்க்கும் விதத்தில், எந்த முறையைக் கையாளப்போகிறார்கள் என்பதை அந்த அறிக்கை தெளிவுபடுத்தியுள்ளது. அது, இது—

"மாணவர்களைச் சேர்ப்பதில் எந்தவிதக் கட்டுப்பாடும் இருக்கப் போவதில்லை. உண்மையில், சேர்ப்பது என்பது எல்லா வகுப்புகளுக்கும், எல்லா இனங்களுக்கும் வழிவிடுவதாகவே இருக்கும். 'முதலில் வருபவர்களுக்கு முதலில் கொடுக்கப்படும்' (First come, first served') என்ற அடிப்படையில் சேர்ப்பது என்பது நடைபெறும்."

சர். பிட்டி. தியாகராயரின் வழி வந்தவராயிற்றே என்று வெட்கப்படாமல், அவர் பெயரால் அமைந்த கல்லூரியில், இத்தகைய கொள்கையைக் கடைப்பிடிக்கமுயலுகிறோமே என்று வேதனைப்படாமல், கல்லூரி நிர்வாகிகளின் சார்பாக ஒருவர் இப்படிப்பட்ட அறிக்கையை வெளியிட்டுள்ளார் என்றால், அவரைப்பற்றி என்ன கருதுவது? குலத்திலே பிறந்து மாற்றான் கையில் சிக்கித் தன்குலத்தையே கெடுக்க வந்த கோடரிக்காம்பு என்றுதானே சொல்லத் தோன்றுகிறது!

விவேகானந்தா கல்லூரி நிர்வாகிகளிடமிருந்தோ, ராமகிருஷ்ண உயர்நிலைப்பள்ளி நிர்வாகிகளிடமிருந்தோ இத்தகைய அறிக்கைபோன்று எப்பொழுதாவது வெளிவந்ததுண்டா? வெளிவரும் என்று கனவு காணத்தான் முடியுமா? அது அவ்வாறிருக்க, சர் தியாகராயர் கல்லூரி நிர்வாகிகள் மட்டும் மானம், வெட்கம், சூடு சொரணை ஆகியவைகளை உதிர்த்துவிட்டு வாழும்போது, வேதனை பிறக்காமல் எப்படியிருக்கும்?

நூற்றுக்கு மூன்று பேர்களாக உள்ள ஆதிக்க வகுப்பினர்—பரம்பரை பரம்பரையாகப் படித்துப் பழக்கப்பட்டவர்கள்—படிப்பினால் ஏற்படும் வசதிகளையெல்லாம் தாங்களே ஏகபோகமாக இதுநாள் வரை அனுபவித்து வருபவர்கள்—சர்க்கார் கல்லூரிகளிலாகட்டும், பிற தனிப்பட்டோர் கல்லூரிகளிலாகட்டும் நூற்றுக்கு ஐம்பதுக்குக் குறையாமல் கல்வி வசதியைப் பெறுபவர்களாகவே இருக்கிறார்கள். விவேகானந்தா கல்லூரி, ராமகிருஷ்ண உயர்நிலைப்பள்ளி போன்ற ஆதிக்க வகுப்பினரின் ஆதிக்கம் நிறைந்த கலைநிலையங்களில், நூற்றுக்குத் தொண்ணூற்றொன்று பேர்கள் ஆதிக்க வகுப்பினராகவே இருக்கிறார்கள். பரம்பரை பரம்பரையாகப் படித்துப் பழக்கப்பட்ட இனம், கலை நிலையங்களிலுள்ள இடங்களை வேண்டிய மட்டும் பிடித்துக் கொள்வதிலே முனைந்துள்ளது—அதற்குச் சக்தி இருக்கிறது, வசதி இருக்கிறது, வாய்ப்பு இருக்கிறது! கல்வி நிலையங்கள் யாருக்கும் திறந்தபடியே வைப்பது என்றால், ஆதிக்க வகுப்பினர் தான் அவற்றை நிரப்புவார்

கள் அவர்களால்தான் நிரப்பமுடியும், சக்தியும்வசதியும் இருக்கின்றன! கல்வி நிலையங்களைத் திறந்தபடியே யாவர்க்கும் வைத்தால், வீழ்த்தப்பட்ட சமுதாயம், ஆதிக்க வகுப்பினரைப் போட்டியில் வெல்ல, பரம்பரைப் பழக்கம் இடந்தராது என்ற உண்மையைக் கண்டறிந்து வீழ்த்தப்பட்ட சமுதாயத்திற்குச் சலுகைகள் அளித்தால்தான், அது படிப்பு வாசனை பெற முடியும் என்று கருதி, நீதிப்படிக்கட்டுமேல் நின்று, வகுப்புவாரி பிரதிநிதித்வக் கொள்கையான நீதிக்கொள்கையை, நாட்டிற்கு வழங்கினார் சர். தியாகராயர். அவருடைய கொள்கைக்குத் திரோகம் வழங்கப்படுகிறது அவருடைய பெயரின் நிழலிலே வாழ்வோரால்!

மாணவர்களைக் கல்லூரியில் சேர்ப்பதில், வகுப்புவாரிக் கொள்கை போன்ற எந்தக் கட்டுப்பாடும் விதிக்கப்போவதில்லை, யாவர்க்கும் திறந்து வைத்திருக்கிறோம். 'முதலில் வருபவர்க்கு, முதலில் கொடுக்கப்படும்' என்று அறிக்கை வெளியிடுவதால் யாருக்குப் பலன்? ஆதிக்க வகுப்பினர்க்குத் தானே! ஆதிக்க வகுப்பினர்தானே அதிகம் இடம் பிடித்துக் கொள்வார்கள்! ஆதிக்க வகுப்பினர்க்குச் சலுகை தரத்தான் விவேகானந்தா கல்லூரியும், பிற கல்லூரிகளும் இருக்கின்றனவே! சர். தியாகராயர் கல்லூரி என்று ஒன்று தேவையில்லையே! சர் தியாகராயரின் கொள்கையைக் கடைப்பிடிக்காது—மாறாகப் பழித்துக் கூறும் கல்லூரிக்கு சர் தியாகராயா பெயர் சூட்டியிருக்க வேண்டியதில்லையே! இதற்கு இசையரசு தண்டபாணிதேசிகர்—நகைச்சுவை அரசர் என். எஸ் கிருஷ்ணன்—இசைவேந்தன் எம். கே. டி. பாகவதர் ஆகியோரின் முயற்சியும், பணமும் கொட்டியிருக்க வேண்டியதில்லையே! திராவிடப் பெருங்குடி மக்களின் பணம் சேர்ந்திருக்க வேண்டியதில்லையே!

ஆரியப்பார்ப்பனின் காசு, அரைக்காசு கூட சேர்ந்திருக்காது—எல்லாம் திராவிடப் பெருங்குடி மக்களின் பணம். அதில் ஆதிக்க வகுப்பினர் பலன் அனுபவிக்கும்படி அழைத்து அழைக்கப்படுகின்றனரே கல்லூரி நிர்வாகிகளால்! கறையான் புற்றெடுக்கக் கருநாகம் குடியேறியது போல், திராவிட மக்களின் முயற்சியிலேயும், உழைப்பிலேயும், பொருளிலேயும் கட்டப்பட்ட தியாகராயர் கல்லூரியில், ஆதிக்க வகுப்பு மாணவர்கள் தங்கு தடையின்றி குடியேற விடப்படுகிறார்கள்! எவ்வளவு வேதனை நிறைந்த செய்தி! சர் தியாகராயரைக் கல்லறையிலிருந்து எழுப்பி, இந்தச் செய்தியை—நிர்வாகிகளின் சார்பாக வெளிவந்துள்ள அறிக்கையை அறிவித்தால், அவர் நெஞ்சம் என்ன துடி துடிக்குமோ? நினைக்கவே நெஞ்சம் வேகிறது! அழியாப் பழியைச் சுமந்து கொண்டாவது, ஆரியர்களின் அண்டைக்கு ஆசைப்பட்டு அறிக்கை வெளியிட்டிருக்கும் நிர்வாகிகளுக்கு, திராவிட இனமே, நீ என்ன பாடம் கற்பிக்கப் போகிறாய்!

விவேகானந்தா கல்லூரியில் [illegible] வாதிகளோ [illegible] வது; தியாகராயக் கல்லூரி

யின் நிர்வாகிகளுக்குப் புத்தி பிறந்திருக்கக் கூடாதா? அந்தப் புத்தி பிறக்காத காரணத்தினால் தானே, திராவிடம் இந்தச் சீரழிவு நிலைக்கு வந்தது!

சென்னை அரசாங்கம், வகுப்புவாரிக் கொள்கையில் ஆதிகாலத்திலே நம்பிக்கை கொண்டிலாதவர்களைக் கொண்ட காங்கிரஸ் அரசாங்கமாக இருந்தபோதிலும், அது, இப்பொழுது வகுப்புவாரிக் கொள்கைக்காக வாதிடுகிறது. தோழர்கள் பக்தவத்சலம், கோபால ரெட்டியார், மாதவமேனன் ஆகியோர்க்கு ஏற்பட்டுள்ள துணிச்சல் கூட தியாகராயர் கல்லூரியின் நிர்வாகிகளுக்கு ஏற்படவில்லையே! வஞ்சக வரதாச்சாரிகள் வைதிக வைத்தியநாத அய்யர்கள், அல்லாடிகிருஷ்ணசாமி அய்யர்கள், வி. வி. சீனிவாச அய்யங்கார்கள் ஆகியோரின் எதிர்ப்புகளையும் சமாளித்துக் காங்கிரஸ் மந்திரிகள் வகுப்புவாரிக் கொள்கையைக் கடைப்பிடிக்க முன்வந்திருக்கும்போது, தியாகராயர் வளர்த்த நீதிக்கட்சியின் வழி வந்தவர்கள் அக்கொள்கையைக் கடைப்பிடிக்க அஞ்சிக் கோழைகளாக வாழ்வதைக் காண வெட்கப்படுகிறோம்—இவர்களும் திராவிட இனத்தைச் சேர்ந்தவர்களாக இருக்கிறார்களே என்று வேதனைப்படுகிறோம்!

நூற்றுக்கு நூறுக ஆதிக்க வகுப்பினரையே சேர்ப்பதற்காகத், தொழிற் கல்லூரிகளை நிறுவி, அந்த வகுப்பினர் இடம் பிடித்துக்கொண்டிருக்கும்போது, நூற்றுக்கு நூறு பேர்களையும் திராவிடர்களாகவே சேர்க்கும் கல்லூரியாக சர் தியாகராயா கல்லூரி விளங்கும் என்று திராவிடப் பெருங்குடி மக்கள் எதிர்பார்த்தார்கள், முற்றிலும் இப்பொழுது ஏமாந்தனர்! வகுப்புவாரி பிரதிநிதித்வக் கொள்கையைக் கூடக் கடைப்பிடிக்கமாட்டார்களாம் நிர்வாகிகள்!

"முதலில் வருபவர்களுக்கு முதலில் கொடுக்கப்படும்." (First Come, First served) என்று கூறுவது, ஆதிக்க வகுப்பினர்க்குத் தாம்பூலம் வைத்துத் தாராளமாக அழைக்கும் அழைப்புதானே! 'நாங்கள் ஆரிய விரோதிகளல்லர்—நீதிக்கட்சியின் கொள்கையின் பாற்பட்டவரல்ல—அரசாங்கக் கொள்கையையும் ஆதரிப்பவர்களல்லர்—தியாகராயரின் கொள்கையையும் கடைப்பிடிக்கமாட்டோம்—ஆகவே, ஆதிக்க வகுப்பினரே நீங்கள் தடங்குதலில்லாமல், தாராளமாக முந்துறுக" என்று அவர்களை ஆதிக்க வகுப்பினரின் முன், 'நல்ல பிள்ளைகளாக' (ஆரிய அடிமைகளாக) காட்டிக்கொள்ளத்தானே, அவ்வறிக்கை! இல்லையாயின், இப்படிப்பட்ட அறிக்கைக்கு அவசியமில்லையே!

வாள் ஏந்திய இனம், தாள் பணிந்து கிடக்கிறதே, பார் ஆண்ட இனம், படிப்பு வராத தன்மைக்குக் காட்சியளிக்கிறதே என்று வேதனையுற்று, வெந்த புண்ணாக வாழ்வை முடித்துக்கொண்ட சர் தியாகராயரின் உள்ளத்திலே, வேலைப் பாய்ச்சுகிறார்கள், தியாகராயக் கல்லூரியின் நிர்வாகிகள்! வெந்த புண்ணிலே வேல்! அந்தோ — [illegible] — கொடுமை!

மலபாரில் மழை

மலைச்சரிவு ஏற்பட்டிருக்கிறது

தலைச்சேரி, ஜூன், 19—

சேர்ந்து முன் தினம் தலைச்சேரிக்கு 29 மைல்களுக்கு அப்பால் பலத்த மழை பெய்ததன் காரணமாக, மலைச்சரிவு ஏற்பட்டதால் தலைச்சேரி—மானந்தவாடிப் போக்குவரத்து தடைபட்டிருக்கிறது. பாதை செப்பனிடும் வேலையில் 'மைசூர் ... ' வழியாகச் ... [illegible] பிராணிகள் போக்குவரத்தான் பட்டு ... நடைபெறுகின்றன.

இன்று காலை 8 மணிக்கு முடிவுள்ள இருபத்தினான்கு மணி நேரத்தில், தலைச்சேரியில் 91 சென்ட் மழை பெய்திருக்கிறது. கடந்த ஆறு நாட்களில் மொத்தம் 13 அங்குலம் மழை பெய்திருக்கிறது.

வர்த்தக வசதிக்கு ஐரோப்பிய நாடுகளின் பொதுநிதி

லண்டன், ஜூன் 21—

சில நிலைமை தொல்லை ... வர்த்தகம் பாதிக்காமல் இருப்பதற்காக ஐரோப்பிய பொதுநிதி ஸ்தாபனம் ஒன்று நீண்டகால விவாதத்தின் பின் ஏற்படுத்தப்பட்டிருக்கிறது.

18 ஐரோப்பிய நாடுகள் இந்நிதியில் தங்கள் ... [illegible] ... ஐரோப்பாவில் ஒரு நாடுக்கும் மற்றொரு நாடுக்கும் நடைபெறும் வர்த்தகத்திற்கான பணம் இந்நிதியிலிருந்து கொடுக்கப்படும். இப்பொழுது ஒரு ... கொடுத்து, அதை வந்த பாக்கியைப் ... பணத்தைக் கணக்கில் வரவு வைப்பதுபோல இந்த ஸ்தாபனம் வேலை செய்யும்.

அதிக வியாபாரம் நடத்தி லாபம் பெற்ற நாடுகள் தங்கள் கணக்கில் இந்நிதியிலிருந்து ஓரளவு தொகை தங்கமாகவும் டாலராகவும் பெறலாம் என்று தெரிகிறது. வியாபாரக் குறைந்த ... நாடுகள் டாலராகவும், தங்கமாகவும் இந்நிதிக்குக் கடனைத் திருப்பவேண்டும்.

மலேரியாவை எதிர்த்து போராட்டம்

ஸாலிஸ்பரி, ஜூன் 20—

தென் ரொடீஷியாவில் மாஷோனலாந்தில், முன்பு மலேரியா மிகவும் அதிகரித்திருந்தது. இப்பொழுது 4 ஐரோப்பியர்கள் 60 ஆப்பிரிக்கர்கள் கொண்ட கோஷ்டி மூலம், இவை அடியோடு ஒழிக்கப்பட்டுவிட்டது.

இக்கோஷ்டியினர் எடுத்துக்கொண்ட முயற்சி 95 சதவிகிதம் வெற்றிபெற்றுவிட்டதென்றே சொல்லலாம். இன்னும் இக்கோஷ்டியினர் முயற்சி செய்து வருகின்றனர். (குளோப்)

ஸ்விடனின் கிழ அரசர்

லண்டன், ஜூன் 21—

உலகிலேயே மிகவும் வயதான அரசர் ஸ்வீடன் மன்னர் குஸ்டாவ் தான். இவர் ஜூன் 16-ல் தன் 92 வது பிறந்த தின விழாவைக் கொண்டாடினர்.

லியோபால்டை அரசபீடம் அழைக்கிறது

ஜினிவா, ஜூன் 21—

புதிய பெல்ஜிய சர்க்கார் ரீஜெண்ஸி சட்டத்தை ரத்து செய்துவிட்டு, பெல்ஜிய மன்னர் பதவிக்கு லியோபால்டை அழை[க்கப்] பார்சன் என்ற நம்பிக்கை ஏற்பட்டிருக்கிறது. லியோபால்டும், அவருடைய இளம் மனைவியும் மிக ஆடம்பரமின்றி ஜினிவாவில் வசித்து வருகின்றனர்.

ஜெர்மனியின் எதிர்காலம்

பாரிஸ், ஜூன் 21—

மூலவல்லரசுகளால் ஏற்படுத்தப்பட்ட 'நிர்வாகக் கமிட்டி' லண்டனில் கூடி, ஜெர்மனியின் எதிர்காலம் பற்றி ஆலோசித்துவிருக்கிறது இதன் முடிவுகளின் பலனாக, மேற்கு ஜெர்மனி இதர ஐரோப்பிய நாடுகளைப்போல சரிசம அந்தஸ்து பெறும்.

அணுகுண்டு வெடிப்பதன் விளைவுகள்

நியூயார்க், ஜூன். 21—

அணுகுண்டு வெடிப்பதால் என்ன விளைவுகள் ஏற்படும் ரேடியேஷன் மூலம் ஏற்படும் காயங்களை எப்படிக் குணப்படுத்துவது போன்ற சில தகவல்களை பிரிட்டனையும், கனடாவையும் கலந்தாலோசித்துக்கொண்டு, யுனைடெட் ஸ்டேட்ஸ் வெளியிடும் என்று தெரிகிறது.

அமெரிக்காவிடம் அணுகுண்டுகள் எவ்வளவு இருக்கிறது, எத்தகைய குண்டுகள் முதலியவை மூடுமந்திரமாகவே இருந்துவரும்.

வேண்டுகோள்

மதுரைமாவட்ட திராவிட முன்னேற்றக் கழக முதல் மாநாட்டு வரவு, செலவு கணக்குகளை விரைவில் பத்திரிகையில் வெளியிடவேண்டியிருப்பதால், மாநாட்டு டிக்கட்டுகளை விற்பனைக்கு வாங்கிச் சென்ற கிளைக்கழகத் தோழர்கள் கணக்குகளை முடித்தும் பணத்தைக் கொடுக்காமலும் விற்பனையாகாத டிக்கட்டுகளைத் திருப்பித் தாராமலும், இருக்கிறார்கள். ஆகவே தயவு செய்து 25-6-50 க்குள் பணத்தையும், டிக்கட்டுகளையும் உடனே இ காத்தான், பொருளாளர் தி. மு. க மாநாடு நிலக்கோட்டை என்ற முகவரிக்கு அனுப்பி வைக்கும்படி கேட்டுக்கொள்ளுகிறேன்.

அன்பன்,
தி. ஆவுடையப்பன்,
வரவேற்புக் கழகத் தலைவன்
ம மா. தி. மு. க. மாநாடு
சோழவந்தான்.

அரசியலில் தான் பகை; அடிப்படையில்பகையில்லை

ரெ. ஆ. இந்தியரின் நேர்மை

"இந்திய ஒபினிய"னில் தலையங்கம்

டர்பன், ஜூன் 21—

பீல்ட் மார்ஷல் ஸ்மட்ஸின் உடல் நிலை குறித்து தென்னாப்பிரிக்க இந்தியர்களுக்குக் கவலை ஏற்பட்டிருக்கிறது என்றும், அவர் குணமடைந்து வாழ வேண்டும் என்று இந்தியர்கள் பிரார்த்தனை செய்து வருகின்றனர் என்று மகாத்மா காந்தியினால் ஆரம்பிக்கப்பட்டு அவருடைய குமாரர் தோழர் மணிலால் காந்தியினால் நடத்தப்பட்டு வரும் 'இந்தியன் ஒபினியன்' பத்திரிகை தன் தலையங்கத்தில் குறிப்பிட்டிருக்கிறது.

அரசியல் அபிப்பிராயம், அவருடைய கொள்கை இவைகளில் அவருக்கும் இந்தியர்களுக்கும் எவ்வளவோ அபிப்பிராய பேதம் இருந்த தென்பது உண்மைதான் என்றாலும் அவர்மீது இந்தியர்கள் பெரு மதிப்பு வைத்திருக்கின்றனர் என்றும் அப்பத்திரிகை எழுதியிருக்கிறது.

கள்ளக்கரன்ஸி நோட்டுகள் பரவுவதை தடுக்க ஏற்பாடு

ஹேக், ஜூன், 21—

இப்பொழுது இங்கு நடைபெறும் 50 தேசங்களின் போலீஸ் அதிகாரிகள் மாநாட்டில், கள்ளக் கரன்ஸி நோட்டுகளை அச்சிடும் கோஷ்டியினரைக் கண்டுபிடிப்பது, இக்கரன்ஸிகள் பரவாமல் தடுப்பது முதலிய விஷயங்கள் குறித்து ஆலோசிக்கப்பட்டு வருகிறது.

இக்கோஷ்டியினர் பிரான்ஸில் இருப்பதாகவும், அவர்களின் பெயர்கூட அதிகாரிகளுக்குத் தெரிந்தே இருக்கிறதென்றும் கூறப்படுகிறது.

பிரிட்டிஷ் போலீசார்தேடும் சுமார் 100 பேர்களுக்கு மேலேயே, பிரான்ஸில் இருப்பதாகக் கூறப்படுகிறது. இவர்களில் யாராவது பிரிட்டிஷ் துறைமுகத்தில் காலடி எடுத்து வைத்தால், அவர்களைக் கைது செய்ய வாரண்ட் தயாராக இருக்கிறது. —குளோப்

நூல் உற்பத்திக்கு அணுசக்தி

லண்டன் ஜூன் 21—

ரேடியோ ஆக்டிவ் கிரணங்கள் கூடிய அணுசக்தி கருவி ஒன்று, நூல் உற்பத்தி செய்வதற்காக கண்டுபிடிக்கப்பட்டு மான்செஸ்டர் மில் ஒன்றில் பரீட்சார்த்தமாக வைக்கப்பட்டிருக்கிறது இதனால், நூல் உற்பத்திக்கு ஆகும் செலவு செருவாகக் குறையும் என்பதுடன், நூற்கும் புரோஸெஸ் ஸ்லோம் இலகுவாக்கப்படுமாம்.

இதில், ரேடியோ ஆக்டிவ் கிரணங்கள் இருந்தபோதிலும், இதைத்தொழிலாளர்கள் உபயோகிப்பதால், எவ்வித ஆபத்தும் ஏற்படக் காரணம் இல்லை.

செயற்கை நிலாவெளியில் இராணுவ ஒத்திகை

லண்டன், ஜூன். 21—

வில்ட்ஷயரில் நடைபெற்ற பிரிட்டிஷ் ராணுவ ஒத்திகையின்போது, பாருக்கு பயிற்சிக்காக செயற்கை நிலாவெளிச்சம் ஏற்படுத்தப்பட்டது

இந்த செயற்கைவெளிச்சம் ஏற்படுத்துவதால் தாக்குபவர்கள் கண்களை மறைத்துஅதன் எதிர்காலிக்குச், சாதகம் ஏற்படுத்துகிறதாம். யுத்தம் முழுவதும் கட்டத்தில், இம்முறை உபயோகிக்கப்பட்டதாகத்தெரிகிறது —குளோப்

உல்லாசப் பிரயாணிகள் மூலம் ஆறரை கோடி

பிரிட்டன் எதிர்பார்க்கிறது

லண்டன், ஜூன். 21

இவ்வருஷம் பிரிட்டனுக்கு வரும் டூரிஸ்டுகள் மூலம் 6½ கோடி பவுன் வருமானம் கிடைக்கும் என்று பிரிட்டன் எதிர்பார்க்கிறது

இவ்வருஷம் 600,000 அயல்நாட்டினர், பிரிட்டனுக்கு விஜயம் செய்யலாம் எனத் தெரிகிறது.

ஜாவாவில் நில அதிர்ச்சி

17 பேர் மாண்டனர் பலர் காயமுற்றனர்

ஜாகர்தா, ஜூன் 20—

கிழக்கு ஜாவாவில் இன்று மிகப்பெரிய நில அதிர்ச்சி ஏற்பட்டது. இதன்விளைவாக, 17 பேர்மாண்டனர். பல நூற்றுக்கணக்கான மக்கள் படுகாய முற்றனர்.

கூரை பிரிக்க அனுமார்கள் ஒத்துழைப்பு!

சென்னை, ஜூன் 21—

திருச்சி ஜில்லாவில், அக்கம்பக்கத்தார்மீது வஞ்சகம் தீர்த்துக்கொள்ள ஒரு நூதன வழி கடைபிடிக்கப்பட்டு வருவதாக, இங்கு தகவல் கிடைத்திருக்கிறது.

ஒருவருக்குத் தன் அண்டை வீட்டுக்காரருடன் சண்டையென்றால், அவர்தன் எதிரிமீது வஞ்சம் தீர்த்துக்கொள்ள, குரங்குகளை உபயோகிக்கிறாராம். திருச்சி ஜில்லாவில், ஏற்கனவே குரங்குகள் அதிகம். ஆகவே, அரைப்படி பட்டாணிக் கடலையை வாங்கி அக்கம்பக்கத்தார் வீட்டின் கூரைமீது வீசிவிட வேண்டியதுதான். குரங்குகள் பட்டாணியைப் பொறுக்குவதற்காக ஓடுகளை எல்லாம் கலைத்து, அந்த வீட்டுக்காரருக்கு ஏக கஷ்டத்தை உண்டுபண்ணிவிடுகிறதாம்.

எலும்புருக்கி நோய்க்கு ஸ்டிரப்டோமைசன்

லண்டன், ஜூன் 2—

[illegible] எலும்புகளிலும் மூட்டுகளிலும் ஏற்படும் ... ஸ்ட்ரெப்டோமைசின் மருந்தினால் குணப்படுத்த முடியும் என்று இப்போது தெரியவருகிறது. ஆனால் வியாதி முற்றுவதற்கு முன்பே இம்மருந்தை உபயோகிக்கவேண்டுமாம்.

மனோவசியம் மூலம் சுகப்பிரசவம்

லண்டன், ஜூன் 21—

ஸர்ரே ... [illegible] மனோவசியம் மூலம் மயக்கம் ... பட்டதன் மூலம் பிரசவ வேதனையின்றி சுகப் பிரசவத்தில் ஒரு குழந்தையைப் பெற்றிருக்கிறாள்

தான் தூங்கி எழுந்ததுபோல இருந்ததென்றும், குழந்தை பிறந்தது தனக்குத் தெரியாது என்றும் இம்முறையை பிற பெண்களுக்கும் சிபார்சு செய்வதாகவும் அந்தப் பெண் கூறுகிறாள்.

சர்வம் கதர் மயமாகவேண்டுமாம்

பியூன்கள் உடை பற்றி சென்னை சர்க்கார் ஏற்பாடு

சென்னை, ஜூன் 21—

மந்திரிகளின் சப்ராசிகள், இதர செக்ரிடேரியட் பியூன்கள் ரெவின்யூ போர்டு மற்றும் இதர இலாகாகளில் உள்ள பியூன்கள் இவர்களுக்கு புது உடை விதியை சென்னை சர்க்கார் ஏற்படுத்தியிருக்கின்றனர்.

இதன்படி பியூன்கள் ஒரு வெள்ளைக் கதர் ஷருவால் வெள்ளை கதர் ஷெர்வானி, சிவப்பு கதர் பட்டைகள் இவைகளை அணியவேண்டும்.

தலைப்பாகை இப்பொழுது உள்ளது போலவே இருக்கும். ஆனால் அது வெள்ளைக்கதராக இருக்கும்

சிவப்புபட்டைகள் ஓரத்தில், மஞ்சள் பைப்பிங் தைக்கப்பட்டிருக்கும்.

இனி நடப்பவை

திருச்சி—: திருவள்ளுவர் தமிழ் சங்கத்தின் ஆதரவில் வாரந்தோறும் தொடர்ந்து நடைபெற்றுவரும் திருக்குறள் வகுப்பு 'பொன்விழா' 24—6—50 மாலை 5 மணிக்கு திருச்சி தெப்பக்குளம் தபால் ... [illegible] உயர்நிலைப்பள்ளி சொற்பொழிவு மன்றத்தில் தோழர் ... கு. செ. விசுவநாதம் அவர்கள் ... மையில் நடைபெறும்.

* *

சைதாப்பேட்டை :— ... மன்றத்தின் சொற்பொழிவு ... டம், 23—6—50 ... மணிக்கு சபையார் ... செ. ஓ நிலையத்தில் 'பு... இளைஞர்களும்' என்னும் ... பற்றிப் பேசுவார்.

தி. மு. கழகச் சொற்பொழிவுகள்

23 - 6 - 50

சீர்காழி :—சி. என். அண்ணாதுரை, பெத்தாம்பாளையம் பழனிச்சாமி, ஈ. வி. கே. சம்பத், கே. கே. நீலமேகம்

25 - 6 - 50

பவானி :—மு கருணாநிதி, எஸ். அப்பாவு.

வட ஆற்காடு மாவட்ட

திராவிட முன்னேற்றக் கழக முதல் மாநாடு

ஜூன் திங்கள் 24, 25 சனி, ஞாயிறுகளில்

ஆரணிக் கோட்டையில் நடைபெறும்

தலைவர் :- க. அன்பழகன் - துவக்குபவர் :- எம். எஸ். இராமசாமி

பொதுச் செயலாளரும், கழகச் சொற்பொழிவாளர்கள் பலரும் கலந்துகொள்வர்

24—6—50-ல் சென்னை முன்னேற்ற நாடகக் கழகத்தார் நடிக்கும்

"கல்சுமந்தகசடர்" :: "வழக்குவாபஸ்" ஆகிய ஓரங்க நாடகங்கள் நடைபெறும்

25-6-50 இரவு கே. ஆர். இராமசாமி, சி. என். ஏ. நடிக்கும்

"சந்திரமோகன்" நாடகம் நடைபெறும்

மாநாட்டுக் கட்டணம்:— வரவேற்பாளர் ரூ. 5-0-0 பார்வையாளர் ரூ. 1-0-0

நாடகங்களுக்குக் கட்டணம் கிடையாது. உணவுக்கு இரண்டு நாட்களுக்கும் ரூ. 2-0-0

வரவேற்புக் குழுவினர்.

கட்டாயக் கல்வி...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

25,000 ஆரம்ப ஆசியர்கள் தேவை, ஆனால் அதனை எதிர்பார்க்க முடியாது என்று!

பள்ளிச்செல்லும் சிறுவர்களின் எண்ணிக்கை 100-க்கு 86 தேவைக்கு வேண்டிய ஆசிரியர்கள் கிடையாது.

இது அமைச்சரின் வாக்கு மூலம். கல்வி வளர்ச்சியில் ஆட்சியாளர் எத்துணை அக்கரை செலுத்துகின்றனர் என்பதற்கு இஃதோர் சிறந்த எடுத்துக்காட்டாகும்!

செலவினங்களால் கல்விக்கென செலவிடுவது மிமிகுதியமான செலவு குறைந்தயை இன்றியமையாச் செலவுக்குப் பணமில்லையென கையை விரிக்கிறது சர்க்கார். இதனால் பெருக வேண்டிய அளவுக்குக் கல்வி பெருகாதது ஒரு புறம். பணியாற்ற [illegible]ணியாற்றுகின்ற ஆசிரியர்களின் நிலை உயராதது மற்றொருபுறம் என்ற நிலையை உருவாக்கி வருகிறது.

எனவே, கல்வித் துறையில் இனியும் இம்மாதிரியாகப் பழைய பல்லவியைப் பாடிக்கொண்டிருப்பதில் பயனில்லை. [illegible] நிலைமையில் மாற்றங்காண சற்றுத் துணிவும் அடி அடிப்படை ஆட்சியாளருக்குத் தேவை. கல்வி கற்க வேண்டிய சிறுவர்களில் 100 க்கு 64 பேருக்குக் கல்வியில்லை என்பதுவேட்கக்கேடான விஷயம். நாகரீக சர்க்கார் இதனைக் குறித்துக் [illegible] கப்பட வேண்டும். [illegible]திய வெறும் பேச்சு [illegible] கொண்டிருப்பதில் [illegible]லை. கல்விக்கென [illegible]டும் தொகை சற்று [illegible] அதிக ஆசிரியர் [illegible] அகல நிலையாற்றமும் [illegible] வேண்டும். போதிய ஆசிரியர்களில்லையே என்ற பல்லவியை விட்டொழித்து குறைந்த காலத்தில் அதிக ஆசிரியர்களுக்குப் பயிற்சி அளிப்பது எப்படி என்பதற்குத் திட்டம் தீட்டவேண்டும்.

ஆசிரியர்களை அதிகமாக உற்பத்தி செய்ய ஒரு புதிய திட்டம் தர விழைகிறோம். அதாவது, எப்படி மற்றத் துறைகளில் தனிப்பட்ட முறையில் பாடம் படித்து பரீட்சைக்குச் செல்லலாம் என்ற முறை இருந்து வருகிறதோ, அங்ஙனமே ஆசிரியப் பயிற்சிப் பாடத்தையும் தனிப்பட்டோர் தாமே படித்துப் பரீட்சை எழுதலாம் என்ற திட்டம் வகுக்கப்படல் வேண்டும். பயிற்சிக் கூடத்தில் சேர்ந்து பயிற்சி பெற வசதியில்லாத பல கற்றறிந்த இளைஞர்கள் ஆசிரியர்களாக முடியும். பாடம் போதிக்க பயிற்சி தேவையாயிற்றே என்றால், அதை வேண்டுமானால், அவர்கள் ஆசிரியர் பணி ஆற்றும் அதே காலத்தில் அடைவதற்கான வழிவகைகளைக் காணலாம்.

இம்மாதிரிப் புதுப்புது திட்டங்களை வகுக்காத வரையில், கல்வித் துறையில் 'முன்னேற்றம் காண்பது' என்பது, முயற்கொம்பாகவே முடியும்.

தாராபுரம் தொகுதியில்
30—6—50ல் நடைபெறும்
சென்னை சட்டசபை தேர்தலில்
ஜனநாயக கட்சி அபேட்சகர்
திரு. S. ரத்னசாமி கவுண்டருக்கு
பச்சைப் பெட்டியில்
தயவுசெய்து ஓட்போடவும்
(விளம்பரம்)

எங்கும் ஏஜண்டுகள் தேவை!
"நியூஸ்" முன்னேற்ற செய்தி வாரப் பத்திரிகை
நகரசபை ஜில்லாபோர்டு, கலெக்டர் ஆபீஸ், ரேஷன் ஆபீஸ், தேவஸ்தானம், கூட்டுறவு ஸ்டோர்ஸ் ஆகிய இலாகாக்களில் நிகழும் நிகழ்ச்சிகளை, உள்ளது உள்ளபடியே (கட்சி-கோஷ்டி, அரசியல் விஷயத்தைக் கலக்காது) ஒலிக்கச்செய்யும் செய்தித்தாள்
வெகு சீக்கிரத்தில் வெளிவருகின்றது
தனிப்பிரதி விலை ஒரு அணா
ஆண்டு சந்தா தபால்மூலம் ரூ. 3-8-0
எங்கும் டிபாசிட் கட்டக்கூடிய விற்பனை ஏஜண்டுகள் விண்ணப்பிக்கவும்
நிர்வாகி 'நியூஸ்' அலுவலகம்,
63-A. கூடராபாளையம் தெரு, மதுரை.

இ. எஸ். எல். ஸி. பரீட்சை - 1951
(8-ம் வகுப்பு)
(தபால் மூலமாயும், நேரிலும் கற்றுக்கொள்ளலாம்.)
செலக்ஷன் கிடையாது
(1) தமிழ் நன்றாய் வாசிக்கவும், எழுதவும் தெரிந்தவர்கள். (முன் படிப்பு தேவையில்லை)
(2) 4, 5, 6, 7 முதலிய வகுப்புகளில் ஏதேனும் ஒன்றில் படித்தவர்கள்.
(3) 8-ம் வகுப்பில் இடையில் நின்றவர்கள்.
(4) இ. எஸ். எல். ஸி. பரீட்சையில் தேர்ச்சி பெறாதவர்கள்.
இப்படிப்பட்டவர்கள் எல்லாம (ஆண், பெண், இரு பாலரும்) மாணவராகச் சேர்ந்து படிக்கலாம்:
ஆங்கில பாடம் இஷ்டபாடமாகக் கற்றுக்கொடுக்கப்படும்
ஆங்கில பாடம், கட்டாயமாகப் படிக்கவேண்டிய பாடமல்ல. இஷ்டப்பட்டவர்கள் மட்டும் ஆங்கில பாடத்தை இஷ்டபாடமாகப் படிக்கலாம்.
சிறந்த முறையில், குறைந்த செலவில் கற்று பூரண தேர்ச்சி பெறலாம் (உத்தரவாதம்)
முழு விவரங்களையும் இன்ஸ்டிடியூட் பிரகடனத்தில் பார்க்கவும்
ஹாஸ்டல் வசதியுண்டு
மனுப்பாரம் பிரகடனம் முதலியவைகளை ரூ 1-0-0 மணியார்டர் மூலம் அனுப்பிப் பெற்றுக்கொள்ளலாம்.
விலாசம்
மெட்ராஸ் இ. எஸ். எல். ஸி. இன்ஸ்டிடியூட்
123 திருப்பரங்குன்றம் ரோடு, மதுரை

விளம்பரம்
வெளிவந்துவிட்டது புதிய நூல்
'என் சபதம்'
உயிரோட்டமுள்ள கருத்துக்கள்
உணர்ச்சியூட்டும் புதிய நடை
விலை 0-4-0
கழிவு 25% செலவு இனும்
மின்னல்பதிப்பகம் புதுச்சேரி.

மலான் மாளிகையில் தீ

கேப்டவுன், ஜூன் 20—

இன்று, திடீரென்று தென்னாப்பிரிக்கப் பிரதமர் மலானின் மாளிகையில் ஒரு தீ விபத்து ஏற்பட்டது. முதலில் படுக்கை அறை ஒன்று தீ பற்ற ஆரம்பித்து, சில மேஜை நாற்காலிகள் தீக்கிரையாயின. தீயணைக்கும் படையினர் உதவியால் தோழர் மலானும், அவரது மகளாரும் காப்பாற்றப்பட்டனர். தீயும் விரைவில் அணைக்கப்பட்டது. சொத்து சேதம் எதுவுமில்லை. மலான், தனது அலுவல்களைக் கவனித்து வருகிறார்.

கோவை
பாரி நிலையம்
12/205 நப்பணக்கார வீதியில்
திறக்கப்பெற்றுள்ளது
கவிஞர் நூல்கள், அண்ணா நூல்கள் மற்றும் எல்லா இயக்கப் புத்தகங்களும்
மு. வ. நூல்கள், சேதுப்பிள்ளை நூல்கள் மற்றும் இலக்கிய நூல்களும்.
S. S. L. C. நோட்ஸ்கள், மற்றும் பள்ளிப் பாடப் புத்தகங்களும் இங்கே கிடைக்கும்
அன்பர்கள் வருக
கோவை பாரிநிலையம்,
கோயம்புத்தூர்.

Printed & Published by T.M. Parthasarathy at the Mercantile Press, 2/45, Muthumari Chetty St, Madras-1.